**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 03.02.2026

அசல் வழக்கு எண். 208/2012

பி.சா.1 – ஜோசப், த/பெ. சூசைராஜ்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

வாதியும் நீங்களும் பெரியப்பா சித்தப்பா வீட்டுப் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். உங்கள் சொத்து எப்படி வந்தது என்றால் எங்கள் அப்பா அனுபவித்து வந்தார். உங்கள் அப்பாவுக்கு கிரயம், தானம் போன்ற பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் வாயிலாக சொத்து கிடைக்கவில்லை என்றால் சரிதான். உங்கள் அப்பா பெயர் சூசை ராஜ் என்றால் சரிதான் வாதியின் அப்பா பெயர் ஆரோக்கியசாமி என்றால் சரிதான். உங்கள் தாத்தா மரியன்ன ரெட்டி என்பவருக்கு நிறைய சொத்துக்கள் ஊரில் இருந்தது என்றால் சரிதான். மரியன்ன ரெட்டி என்பவர் பெயரில் உள்ள சொத்துக்கள் எல்லாம் அப்படியேதான் இருக்கிறது இன்னும் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். நீங்கள் சில சொத்துக்களை விற்பனை செய்து விட்டீர்கள் என்றால் சரி இல்லை நாங்கள் விற்பனை செய்யவில்லை. கடந்த 02.07.1974 அன்று சூசைராஜ் அவர்களால் எழுதப்பட்ட உங்களிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.11.1975 அன்று சூசைராஜ் அவர்களால் எழுதப்பட்ட உங்களிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 15.06.1978 அன்று சூசைராஜ் அவர்களால் எழுதப்பட்ட உங்களிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஆவணம் பதிவு

செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.08.1998 அன்று சூசைராஜ் அவர்களால் எழுதப்பட்ட உங்களிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஆவணம் அதிகார முகவர் சிரில் ஜோசாப் என்பவரால் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பாகம் பிரித்தது குறித்து எந்த விவரமும் இல்லாமல் பாகம் பிரிக்காமல் அனைத்து சொத்துக்களும் முழுமையாக விற்பனை செய்தது போல் எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. உங்கள் தந்தையார் எழுதிக் கொடுத்த மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்திலும் பாகம் பிரியாத சொத்து என்று வாசகம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான் குடும்ப செலவுக்காக அவ்வாறு எழுதினார். மேற்படி விற்பனை செய்தது போக மீதம் எவ்வளவு சொத்து இருக்கிறது என்றால் 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதாவது உங்கள் தகப்பனாருக்கு மட்டும் ஆறு ஏக்கர் இருக்கிறது என்றால் என்னுடைய தாத்தாவிற்கு ஆறு ஏக்கர் இருக்கிறது. ஆறு ஏக்கர் உங்கள் தாத்தா பெயரில் இருக்கிறது என்று காட்டுவதற்கு என்ன பத்திரம் இருக்கிறது என்றால் என்னிடம் எந்த பத்திரமும் கிடையாது. உங்கள் பெயரிலோ அல்லது வாதியின் பெயரிலோ கூட்டாக ஏதேனும் பட்டா இருக்கிறதா என்றால் இல்லை. திருவள்ளுவர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தவிர வேறு ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான். உங்கள் குடும்பத்தினர் இடையே பாகம் பிரிந்து விட்டது என்று மேற்படி வழக்கு நடத்தினீர்கள் என்றால் சரியில்லை. அந்த வழக்கின் அடிப்படையில் தான் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அதாவது காஞ்சிபுரத்தில் நில ஆர்ஜித வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால்

வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி எல்.ஏ.ஓ.பி நில ஆர்ஜித வழக்கில் வழக்கு எண் 173/2024 நீங்களும் வாதியும் ஒரு தரப்பினராக இருக்கிறீர்கள் என்றால் சரிதான். மரியன்ன ரெட்டி சொத்து குறித்து திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். தரப்பினர் பெயர் என்ன என்றால் மதீன் அம்மாள் ஆவார். மதீன் அம்மாள் என்பவருக்கு வல்லம் மற்றும் பூதனூர் கிராமத்தில் சொத்துக்கள் இருந்தது என்றால் வல்லம் கிராமத்தில் மட்டுமே சொத்துக்கள் இருந்தது பூதனூர் கிராமத்தில் சொத்துக்கள் இல்லை. அந்த சொத்து பாட்டிக்கு எப்படி வந்தது என்றால் என்னுடைய தாத்தா வாங்கி கொடுத்தது ஆகும். உங்கள் மதீன் அம்மாள் பாட்டிக்கு எப்படி சொத்து வந்தது என்றால் தாத்தா வாங்கி கொடுத்தார் அதற்கான பத்திரம் இருக்கிறதா என்றால் பத்திரம் இருக்கிறது. உங்கள் பெரியப்பா ஆரோக்கியசாமி எப்பொழுது இறந்து விட்டார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. உங்கள் தந்தை சூசைராஜ் எப்போது இறந்தார் என்றால் 2001 ஆம் ஆண்டு இறந்து விட்டார். 2001 ஆம் ஆண்டு கூட்டு பட்டா ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என்றால் இல்லை ஒற்றுமையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் கூட்டு பட்டா வைத்திருந்தீர்களா என்றால் கூட்டு பட்டா இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram